## சுருக்கம்

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை ஏற்று "வடகறி" தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு கோரிக்கை நிராகரித்து – ஆணை –வெளியிடப்படுகிறது.

---

## வணிகவரி மற்றும் பதிவு (சி1) த்துறை

அரசாணை (டி) எண். 254

நாள். 25.06.2014
ஜய, ஆனி 11,
திருவள்ளுவர் ஆண்டு, 2045

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 21.7.2011.
2. அரசாணை (நிலை) எண்.2, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 03.1.2012.
3. வணிகவரி ஆணையர் கடிதம் எண்.சட்டக்குழு–4/16622/2014, நாள் 16.06.2014 தேர்வுக்குழு எண்.25/2014–2015.

-----

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சில கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

2. முதன்மைச்செயலர் / வணிகவரி ஆணையர், மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்கண்ட குழு "வடகறி" திரைப்படத்தை முழுமையாக பார்வையிட்டு, பார்வையிட்ட ஐந்து உறுப்பினர்களும் "வடகறி" என்ற திரைப்படம் கேளிக்கை விலக்கு அளிப்பதற்கு தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

3. "வடகறி" தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட தேர்வுக்குழு உறுப்பினர்களின் பரிந்துரைகள் பின்வருமாறு :-

| வ. எண் | உறுப்பினர் திரு/திருமதி | பரிந்துரை |
|---|---|---|
| 1. | வி.ராதா, இணை ஆணையர் (வணிகவரி), சென்னை (வடக்கு) கோட்டம், சென்னை –6. | தமிழில் பெயரிடப்பட்ட 'U' சான்றிதழ் பெற்றுள்ள திரைப்படம் என்றாலும் திரைப்படத்தின் ஒரு பாடலில் ஆங்கில வார்த்தைகளே அதிகமாக உள்ளது என்பதாலும், திரைப்படத்தின் முற்பகுதியில் பெண்களை தரக்குறைவான வார்த்தைகளால் குறிப்பிடும் வசனங்கள் இடம்பெற்றிருப்பது தமிழ் பண்பாடு மற்றும் வளர்ச்சிக்கு உகந்தது அல்ல என்பதாலும், திரைப்படத்தின் ஒரு பாடல் காட்சியில் நடன மங்கையர் ஆபாசமாக தோன்றும் காட்சி இடம் பெற்றுள்ளது என்பதாலும், அரசாணையின் நிபந்தனைகளுக்கு உட்படாததால் **இத்திரைப்படம் கேளிக்கை வரி விலக்கிற்கு தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளார்.** |
| 2. | வே.கூழுச்சாமி, துணை செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை | இத்திரைப்படத்திற்கு 'U' சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்றாலும், திரைப்படத்தில் ஆங்கில வார்த்தைகள் அதிகமாக உள்ளது என்பதாலும், தமிழ் பண்பாடு மற்றும் வளர்ச்சிக்கு உகந்ததான எந்த கருத்தும் இத்திரைப்படத்தில் தெரிவிக்கப்படவில்லை என்பதாலும், திரைப்படத்தில் வன்முறை காட்சிகள் உள்ளது என்பதாலும், **இத்திரைப்படத்திற்கு வரி விலக்கு அளிக்க வேண்டாம்** என பரிந்துரை செய்துள்ளார். |

| | | |
|---|---|---|
| 3. | R.V.உதயகுமார், இயக்குநர் | திரைப்படத்தின் தலைப்பு தமிழில் இருந்தாலும், பாடல் வரிகள் ஒரு பாடலில் அதிகமாக ஆங்கில வார்த்தைகளே வருகின்றன என்பதாலும், திரைப்படத்தின் ஆரம்ப காட்சிகளில் பெண்களை அவமதிக்கும் விதமாக 'பிகர்' 'ஆள்', 'செட்டப்' மற்றும் 'கரக்ட் பண்றது' போன்ற தரக்குறைவான வசன வார்த்தைகள் இருப்பதால் பண்பாட்டை மீறி அவை பிரயோகப்படுத்தப்பட்டுள்ளது என்பதாலும், திரைப்படத்தின் ஒரு நடனக் காட்சியில் ஆபாசம் கொஞ்சம் அதிகமாக (வெளிநாட்டு பெண்களின் ஆடையில்) தெரிகிறது என்பதாலும், **இத்திரைப்படத்திற்கு வரிவிலக்கு தர தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளார்.** |
| 4. | C.V.ராஜேந்திரன், இயக்குநர் | இத்திரைப்படம் பண்பாட்டிற்கு அப்பாற்பட்டு எடுக்கப்பட்ட படம் என்பதாலும் திரைப்படத்தில் ஆங்கில வார்த்தைகள் அதிகம் உள்ளது என்பதாலும், **இத்திரைப்படத்திற்கு வரி விலக்கு அளிக்கக் கூடாது என பரிந்துரை செய்துள்ளார்.** |
| 5. | L.R. ஈஸ்வரி, பின்னணிப் பாடகி | திரைப்படத்தின் பெயர் தமிழில் இருக்கிறது என்றாலும், 'U' சான்றிதழ் பெற்ற திரைப்படம் என்றாலும், திரைப்படத்தில் ஆங்கில வார்த்தைகள் அதிகமாக இருக்கிறது என்பதாலும், இத்திரைப்படத்தை தமிழ் பண்பாட்டிற்கு புறம்பாக எடுத்திருக்கிறார்கள் என்பதாலும் **இத்திரைப்படத்திற்கு வரி விலக்கு அளிக்க தகுதியில்லை என பரிந்துரை செய்துள்ளார்.** |

4. மேற்கண்ட தேர்வுக்குழு உறுப்பினர்களின் பரிந்துரைகளை ஆய்வு செய்ததில், "வடகறி" தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட ஐந்து உறுப்பினர்களும் இத்திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு அளிப்பதற்கு பரிந்துரை செய்யவில்லை என்பதாலும், அரசாணை நிலை எண்.89, வணிகவரி மற்றும் பதிவு (சி1) துறை, நாள் 21.7.2011–ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதி வரையறைகளை இத்திரைப்படம் பூர்த்தி செய்யவில்லை என்பதாலும், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் "வடகறி" தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்க இயலாது என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே. பிரபாகர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.

நகல்:

முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
சிறப்பு நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அலுவலகம், சென்னை–9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 27/6/2014